# கார்னர்ஸ்டோன் ஜெபவீடு,

## பெங்களூர்

**ரோமர் புத்தகம் - வேத வினா போட்டி - செப்டம்பர் 2023**

**கேள்விகள்: *30***

**மதிப்பெண்கள்: *30*** **பெயர்: ___________________________**

**1. பவுலடியார் "தாம்" இயேசுக் கிறிஸ்துவிற்கு யார் என்று கருதுகிறார்? (ரோமர் 1:1)?** [ ]

*A) ஊழியக்காரன் B) எஜமான் C) சமமானவர் D) அப்போஸ்தலர்*

**2. ரோமர் 6:23ன் படி, தேவனுடைய கிருபைவரம் என்ன?** [ ]

*A) இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் B) இயேசுவினால் வரும் பூமிக்குரிய செல்வம்*

*C) இயேசுவினால் வரும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் D) இயேசுவினால் வரும் ஞானம்*

> ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய _______________.

**3. வசனத்தை பூர்த்தி செய்க - ரோமர் 8:28: அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் ________ சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.** [ ]

*A) நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிகிறவர்களுக்கு B) தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு*

*C) செல்வந்தர்களுக்கு D) புத்திசாலிகளுக்கு*

**4. ரோமர் 12:2-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் எதற்கு ஏற்ற வேஷம் தரிக்கக்கூடாது?** [ ]

*A) இந்தப் பிரபஞ்சத்திற்கு B) நியாயப்பிரமாணத்திற்கு C) பெற்றோர்களுக்கு D) தேவாலயத்திற்கு*

> ரோமர் 12:2. நீங்கள் _______ ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**5. ரோமர் 13:8-ல் கூறப்பட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் யாருக்கும் என்ன கடன்பட்டிருக்கக் கூடாது?** [ ]

*A) கனப்படுத்துகிற B) கீழ்படிகின்ற C) பணம் சம்மந்தப்பட்ட D) அன்புகூருகிற*

> ரோமர் 13:8 ஒருவரிடத்திலொருவர் ______ கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

**6. ரோமர் 10:9ல், இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?** [ ]

*A) ஆலயத்திற்கு தவறாமல் செல்லவேண்டும் B) ஞானஸ்நானம் பெறவேண்டும்*

*C) இயேசுவை வாயினால் அறிக்கையிட்டு, அவர் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தால்*

*D) சபைக்கு உற்சாகமாக காணிக்கைகள் செலுத்தவேண்டும்*

> ரோமர் 10:9. என்னவென்றால், கர்த்தராகிய ______, ________ இரட்சிக்கப்படுவாய்.

**7. ரோமர் 6:4ன் படி, இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் எதோடு ஒப்பிடப்பட்டுள்ளது?** [ ]

*A) ஞானஸ்நானத்தோடு B) விருத்தசேதனத்தோடு C) உபவாசத்தோடு*

*D) தியாகமான நல்ல செயல்களோடு*

> ரோமர் 6:4. மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் _______ கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

***8. வசனத்தை முடிக்கவும் 8:18: "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் _______ ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்."*** [ ]

*A) சோதனைகளுக்கு B) பரிசுகளுக்கு C) ஆசீர்வாதங்களுக்கு D) மகிமைக்கு*

***9. வசனத்தை முடிக்கவும் ரோமர் 14:13*** **இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக ______ போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.** [ ]

*A)* தடுக்கலையும் இடறலையும் *B) கற்களை C) சாபங்களை D) ஆசீர்வாதங்களை*

***10. ரோமர் 14:1-3ன்படி விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்கள் பற்றி பவுலடியார் என்ன சொல்கிறார்?*** [ ]

*A) அவர்கள் உண்மையான விசுவாசிகள் அல்ல B) அவர்கள் புறக்கணிப்படவேண்டிய விசுவாசிகள்*

*C) அவர்களை சேர்த்துக்கொள்ளவேண்டும், அவர்கள் சந்தேகங்களை குற்றமாக பார்க்கக்கூடாது*

*D) அவர்கள் இனி இரட்சிக்கப்படுவது கடினம்*

***11. ரோமர் 12:1ல் "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" எதை குறிப்பிடுகிறார்?*** [ ]

*A) தவறாமல் ஒவ்வொரு வாரமும் சபைக்கு வருவதை B) கைகளைத் தட்டி கர்த்தரை துதிப்பதை*

*C) ஆவியில் நிரம்பி அந்நிய பாஷையில் ஆராதிப்பது*

*D) சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்*

| |
|---|
| *ரோமர் 12:1ல் அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் ____ என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.* |

***12. தேவன் மீது நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கை நம்மை என்ன செய்யாது? (ரோமர் 5:5)?*** [ ]

*A) தவறான வழி காட்டாது B) காட்டிக்கொடுக்காது C) ஏமாற்றாது D) வெட்கப்படுத்தாது*

| |
|---|
| *ரோமர் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை _______.* |

***13. பவுலடியார் எழுதிய அனைத்து கடிதங்களிலும் 'ரோமர்' புத்தம் வித்தியாசமானது ஏனென்றால்?*** [ ]

*A) இக்கடிதம் எல்லா ஊர்களில் உள்ள சபைகளுக்காக எழுதினார் B) இது யூத சபைக்கு எழுதினார்*

*C) பவுலடியார் தாம் ஸ்தாபிக்காத சபைக்கு எழுதினார் D) இது எருசலேமில் உள்ள சபைக்கு எழுதினார்*

***14. பவுலடியார் எதைக் குறித்து வெட்கப்படமாட்டேன் என்று கூறுகிறார்? (ரோமர் 1:16)*** [ ]

*A)* கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து *B) அவரது கல்விப் பின்னணியைக் குறித்து*

*C) அவரது யூத பின்னணியைக் குறித்து D) பக்தி வைராக்கியத்தைக் குறித்து*

***15. பவுலடியார் சொல்லச்சொல்ல ரோமர் கடிதத்தை எழுதியவர் என்ன?*** [ ]

*A)* தெர்தியு *B) தீமோத்தேயு C) பிரிசில்லா D)* ஆக்கில்லா

***16. ரோமர் புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் எத்தனை வசனங்களை பவுலடியார் "ஆமென் என்ற வார்த்தையோடு முடிக்கிறார்"?*** [ ]

*A) 1 வசனத்தில் B) 2 வசனங்களில் C) 3 வசனங்களில் D) 4 வசனங்களில்*

***17. இவர்களில் ஒருவர் பவுலடியாரின் இனத்தார்/உறவினர் இல்லை? அந்த ஒருவர் யார்? (ரோமர் 16:21)*** [ ]

*A) லூகி B) யாசோன் C) சொசிபத்தர் D) காயு*

***18. சமாதானத்தின் தேவன் விரைவில் என்ன செய்வார் (ரோமர் 16:20)?*** [ ]

*A) உலகம் முழுவதையும் மீட்பார் B) சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்*

*C) தீய இருளின் செயல்களை அழிப்பார் D) நம் உள்ளங்களில் ஆட்சி செய்வார்*

***19. யாருடைய தாய் பவுலுக்கும் தாயாக இருந்தார் (ரோமர் 16:13)?*** [ ]

*A) தீத்து B) ரூபை C) தீமோத்தேயு D) மாற்கு*

***20. கிறிஸ்து எப்படி நடந்துக்கொள்ளவில்லை (வாழவில்லை)? (ரோமர் 15:3)? [ ]***

*A) தம்மைத் தாமே உயர்த்தி பேசிக்கொண்டு B) தமக்கே பிரியமாய்*

*C) தம்மையே தியாகம் செய்து D) தம்மைத் தாமே புகழ்ந்துக்கொண்டு*

| |
|---|
| *ரோமர் 15:3 கிறிஸ்துவும் _______ நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்.* |

***21. ரோமர் 14:23ன் படி எந்த செயல்களெல்லாம் பாவம்? [ ]***

*A) விசுவாசத்தினாலே வராத யாவும் B) பிறரைப் பற்றி கவலைப்படாமல் தனக்காகச் செய்யும் அனைத்தும்*

*C) தேவனின் சட்டத்திற்கு எதிரானது அனைத்தும் D) பழைய ஏற்பாட்டிற்கு எதிரானது அனைத்தும்*

| |
|---|
| *ரோமர் 14:23. ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் (சந்தேகப்படுகிறவனாய்ப்) புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். ______ பாவமே.* |

***22. வசனத்தை பூர்த்தி செய்க: ரோமர் 14:17. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் _________. [ ]***

*A. பரிசுத்தமாகியிருக்கிறது B. ஆராதனையாயிருக்கிறது C. சந்தோஷமுமாயிருக்கிறது D. நீதியாக இருக்கிறது*

***23. வசனத்தை பூர்த்தி செய்க: ரோமர் 14:15. போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக _____. [ ]***

*A) பிறந்தாரே B) மரித்தாரே C) உயிர்த்தெழுந்தாரே D) மறுபடியும் வருவாரே*

***24. எது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது? (ரோமர் 13:10) [ ]***

*A) கீழ்ப்படிதல் B) நீதி C) அன்பு D) கிருபை*

| |
|---|
| *ரோமர் 13:10; ஆதலால் ______ நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.* |

***25. பசியுடன் இருக்கும் எதிரிக்கு என்ன செய்ய வேண்டும் (ரோமர் 12:20)? [ ]***

*A) அவர்கள் பட்டினி கிடக்கட்டும் B) அவர்கள் வேலை செய்து சாப்பிடட்டும்*

*C) அவர்களுக்கு சாப்பிட உணவு கொடுக்கவேண்டும் D) அவர்களுக்கு தங்க இடம் கொடுக்கவும்*

***26. பவுலடியார் இஸ்ரவேலின் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (ரோமர் 11:1)? [ ]***

*A) யூதா கோத்திரம் B) லெவி கோத்திரம் C) பென்யமீன் கோத்திரம் D) இயேசு கோத்திரம்*

***27. இஸ்ரவேலர்களுக்காக பவுலடியாரின் ஜெபம் என்ன (ரோமர் 10:1)? [ ]***

*A) அவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாகவேண்டும் B) அவர்கள் சமாதானத்துடன் வாழவேண்டும்*

*C) அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் D) அவர்கள் சத்தியத்தை அறியவேண்டும்*

***28. மக்களை இடறலடையச் செய்யும் கல் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 9:33)? [ ]***
*A) சீனாய் மலையில் B) ஒலிவ மலையில் C) தேவாலயத்தில் D) சீயோனில்*

| |
|---|
| *ரோமர் 9:33. இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், ____ வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.* |

***29. பவுலடியார் ரோம் சபையாரை ஏன் பார்க்க விரும்பினார்? (ரோமர் 1:10) [ ]***
*A) அவர்களை கடிந்துக்கொள்வதற்காக B) அவர்களின் நலம் விசாரிப்பதற்காக*
*C) ஆவிக்குரிய சில வரங்களை கொடுக்கும்படிக்கு D) தாம் ஒரு அப்போஸ்தலர் என்று அவர்களுக்கு காட்டும்படிக்கு*
***30. விசுவாசத்தினால் யார் பிழைப்பான்? (ரோமர் 1:17)? [ ]***
*A) ஞானவான்கள் B) நீதிமான்கள் C) கர்த்தர் மீது நம்பிக்கை வைத்தவர்கள்*

*D) பாவம் மன்னிக்கப்பட்டவர்கள்*